# தமிழ் முரசு

அனைத்து இயக்கங்களும் இணைந்து போராடுவோம்

முரசு: 5 சித்திரை 1987 ஒலி: 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரசின் பார்வையில்

தமிழ் முரசு

தமிழ்முரசு-66

**கற்பனைகள் உடையட்டும்**
**உண்மைகள் உரைப்படட்டும்.**

ஈழப்போராட்டம் தொடர்பான எமது கற்பனைகளும், கனவுகளும் உடைக்கப்பட்டு உண்மை நிலை எம்மை சுட்டுத் தகிக்கும் ஒரு காலகட்டத்தில் நாம் இன்று தள்ளப்பட்டிருக்கிறோம். ஒரு புறத்தில் மிருகத்தனமாக வேண்டுகின்ற வீரியும், வெண்மேனான் துணிந்தும் எம்மக்களைக் கோரத்தனமாகக் கொலை செய்யும் சிறிலங்கா இனவாத அரசு; மறு புறத்திலோ ஆயுத பாசிசம் நடத்தும் எம்மினத்தின் புதிய சர்வாதிகாரிகள்.

எமது போராட்டத்தை சரியாக நோக்குவோர்களானால், இரு தரப்பிலும் உள்ள இந்த ஆயுததாரிகளுக்கிடையே ஒரு உடன்பாடு ஏற்பட்டிருப்பதையும் அந்த உடன்பாட்டின் ஒரேயொரு நோக்கம் இலங்கைத் தீவில் வாழும் ஒரு இலங்கையரும்

தொடர்ந்து பிரிந்து வைப்பதென்பதும் அதன் பின் மாதத்திலே முதலாளித்துவ சுகபோக வாழ்க்கையை இழக்கிறதும் என்பதுமாகும்.

இவற்றின் எதிரொலிகள் தான் திருமணப் பந்தோடு, கொடும் குணக்கெடுப்பு, யாழ்ப்பாணம் மீதான அடிமைத் தாக்குதல்கள், இந்த அனைத்துத் தாக்குதல்களும் இருக்கத் தப்பட்டது இரு இனங்களைச் சேர்ந்த அப்பாவி மக்களை நெறிதாக்கத்தான்.

இந்தக் கட்டத்தில் எமது தேசத்தின் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும் அம் நீக்கமற சிந்திக்க வேண்டியுள்ளது. நமது கள் இருந்த, தனி இயக்கங்கள் இருந்த தனிநபர்கள் இருந்த அல்லது அந்நிய உறவுகள் அற்ற எமது கருவினை உணர்ந்து தெரிந்து போராட்டத்தை எமது தோள்களிலே சுமக்கும் சரியான திசைவழியே இட்டுப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேரான பாதையில் போராட்டத்தை முன்னெடுப்போம்

ஈழப்போராட்டத்தில் தலை தூக்கிய பிற்போக்குச் சக்திகளின் அதிக்கம் இன்று போராட்டத்தை திக்கு திசை தெரியாமல் சீரழித்துள்ளது. விடியலை நோக்கி நகர்ந்துகொண்டிருந்த எமது போராட்டம் இன்று விழிப்புலனுக்கு எதுவுமே புலனாகாத இருட்டுக்குள் தள்ளப்பட்டிருக்கிறது. இயக்கங்களுக்கிடையிலான முரண்பாடுகளும், இயக்கங்களுக்குள்ளானஉட்கட்சிப் பிரச்சனைகளும் ஒரு தேசிய இனத்தின் தேச விடுதலைப் போராட்டத்தை நாசமாக்கும் சூழ்நிலையை ஏற்படுடுத்தியுள்ளன. சித்தாந்த நெறிப்பாடுகளோ, அன்றி மானுடநேசமோ சிறிதும் இல்லாமல் வெறும் பதவி அதிகாரஆசைகளில் மூழ்கிக்கிடக்கும் பாசிசவாதிகளிடையே போராட்டம் சிக்கிக் கொண்டதால் இதுவரைகாலமும் எம்மக்கள் அனுபவித்த எல்லையில்லாத துன்பங்களும், சொல்லமுடியாதஇழப்புக்களும் வீணாகப் போய்க் கொண்டிருக்கின்றன.

இன்று போராட்டத்தில் கூறப்படும் பல பொய்களையும்மீறி ஒரு உண்மையை நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் அதாவது சமீப காலங்களில் எம்மிடையே உள்ள பிற்போக்குச் சக்திகள் மேற்கொண்ட நடவடிக்கைகளால் எமதுபோராட்டம் பல ஆண்டு காலம் பின்தள்ளப்பட்டிருக்கிறது. அதே சமயம் பலவீனமான ஒரு நிலையிலிருந்த எமது பொது எதிரியாகிய சிறீலங்கா அரசுக்கு பலமுனைகளிலும் வெற்றிகிட்டி வருகிறது. உண்மையிலேயே சிறீலங்கா நவபாசிச அரசுக்கு இந்த வெற்றி கிட்டுவதற்கான காரணம் அவர்களுடைய பலம் அல்ல. எம்முடையே உள்ள பலவீனமேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டம் சரியான வகையிலே நெறிப்படுத்தப்பட்டிருக்குமானல்...... முற்போக்குச் சக்திகளின் கரங்கள்பலப்படுத்தப்பட்டிருக்குமானல் இன்று நாம் வெற்றியை அண்மித்திருக்கமுடியும். ஏனெனில் தென்னிலங்கையில் இன்று சிறீலங்கா அரசு ஏராளமான பிரச்சனைகளுக்கிடையில் தவிக்கிறது. சிங்கள மக்கள் மீதும்அரசின் அடக்குமுறைக் கரங்கள் வலுவாகப் படர ஆரம்பித்துவிட்டதால் அங்கும் புரட்சியின் பொறிகள் பறக்க ஆரம்பித்துவிட்டன. அதன் விளைவாகத்தான், நேற்றுவரை தமிழ் பேசும் மக்கள் மீது படரவிட்ட அதே. பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பாவித்து சிறீலங்காஅரசுபல நூறு சிங்கள இளைஞர்களையும், யுவதிகளையும் கைதுசெய்து சிறையில் அடைக்க ஆரம்பித்துவிட்டது.

அதுமாத்திரமல்ல நாட்டில் ஏற்பட்டுவிட்ட பொருளாதாரச் சீரழிவுகளை சீர்திருத்தும்வழிவகைகள் ஏதும் அரசுக்குஇல்லை 1977ம் ஆண்டு இனவாத ஜெயவர்த்தன அரசு பதவிக்கு, வரும்போது சிறீலங்காவின் வெளிநாட்டுக் கடன் 4.5 பில்லியன் ரூபாய்களாக இருந்தது. ஆனல், 1985ம்ஆண்டு இது 67.6 பில்லியன் ரூபாய்களைத் தாண்டிவிட்டது. 1976 ம் ஆண்டு 18 பில்லியன் ரூபாய்களாக இருந்த அரசின் உள்நாட்டுக் கடன் 1985ம் ஆண்டில் 63.19 பில்லியன் ரூபாய்களாகிவிட்டது. ஜெயவர்த்தனவின் இனவாத அரசை இத்தகையதொரு மீள முடியாத நெருக்கடி நிலைக்குத் தள்ளிவிட்ட பெருமை ஈழப் போராட்டத்திற்கு இருக்கிறது.

உறுதியுடன் முடுக்கிவிடப்பட்ட ஈழப்போராட்டத்தை அடக்குவதற்கு தனது இராணுவ இயந்திரத்திற்கு இராட்சதத்தனமாக தீனி போடவேண்டிய அவசியத்தேவை சிறீலங்கா இன

வாத அரசுக்கு ஏற்பட்டது. வெறும் அரச விழா அலங்கரிப்புகளில் கலந்து கொள்வதை மாத்திரம் வழக்கமாகக் கொண்ட கூலிப் படைகளுக்கு நவீன ஆயுதங்கள், விசேடபயிற்சிகள் என்று கோடிக்கணக்கான ரூபாய்கள் வாரியிறைக்கப்பட்டன. 1980ம் ஆண்டு 919.9 மில்லியன் ரூபாய்களாக இருந்த அரசின் பாதுகாப்புச்(?) செலவீடுகள்1985 இல் 5,035.8 மில்லியன் ரூபாய்களாகவும் 1986இல் 10,335 மில்லியன் ரூபாய்களாகவும்அதிகரித்துள்ளது.

இதுமாத்திரமல்ல ஒரு புறமாக தமிழ்பேசும் மக்களைக் கொன்றுகுவிக்கும் சிறீலங்கா அரசு மறுபுறத்தில் தனதுஇராணுவத்தைப் பலப்படுத்தி தனது ஆட்சியைக் காப்பாற்றும், ஒரே நோக்குடன் சிங்கள மக்களுக்கான சமூக நலச்செலவீடுகளையும் பாரிய அளவில் வெட்டி வருகிறது. கல்வி,சுகாதாரம், சமூக சேவைகள் ஆகிய துறைகளில் பாரிய வெட்டுக்களை மேற்கொண்ட அரசாங்கம் தனது இராணுவத்துக்கு மேலும் மேலும் நிதியை ஒதுக்கிவருகிறது. பணவீக்கம்,வேலையில்லாத்வர்களின் எண்ணிக்கை ஆகியன தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே போகிறது. ஏறத்தாழ தீவின் 45% மான மக்கள் உணவு முத்திரைகளை நம்பி வாழ்க்கை நடத்தவேண்டிய நிலைக்கு அதாவது வறுமைக் கோட்டுக்குக் கீழேவாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். மக்களை மரணக் குழிக்குள் விழவிடாது இருப்பதற்கு 2மில்லியன் ரூபாய்களைக் மாத்திரம் ஒதுக்கும் அரசு தனது இராணுவத்திற்கு 10மில்லியன் ரூபாய்களைத் தீனியாகப் போடுகிறது.

இப்படி சிறீலங்கா அரசு பொருளாதார நெருக்குவாரத்திலும் இதன் விளைவாக சிங்கள மக்கள் புரட்சியின் தலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசலிலும் தள்ளப்பட்டிருக்கும் இந்த நிலைக்காகத்தான் ஈழத்தின் முற்போக்குச் சக்திகள் காத்திருந்தன. இத்தகையதொரு சூழ்நிலையை உருவாக்கியே ஈழமக்களின் அடிமை விலங்குகளை உடைக்க முடியும் எனப் புரிந்திருந்தன. ஆனல் முதலாளித்துவம் சக்தி வாய்ந்தது என்பதை மீண்டும் ஒரு முறை நிலை நாட்டியிருக்கிறது. எம்மவரையே தன் கைக்கூலிகளாக விலைக்கு வாங்கி வெற்றிக்கான எமது போராட்டச் சூழ்நிலையை முற்றாக மாற்றிவிட்டது.

இது ஈழப் போராட்டத்தில் எமக்குக் கிடைத்துள்ள கசப்பான ஆனல், சிறப்பான அனுபவம் இதிலிருந்தாவது நாம்பாடங் கற்றுக் கொள்வோம். பிற்போக்காளர்களையும், அதிகார-ரப்பிரியர்களையும், பாசிஸ்டுகளையும் நிராகரித்து இனிவரும் காலத்திலாவது புரட்சிகர முற்போக்குச் சக்திகளின் கரங்களைப் பலப்படுத்தி நேரான பாதையில் போராட்டத்தைமுன்னெடுப்போம்.

---

தோழர்களே!

ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு 'தமிழ் முரசு' ஆற்றிவரும் பங்களிப்புக்கு வாழ்த்துடன் உங்கள் அறிந்து கொண்டு வையும் வருகின்றேன். தொடர்புக்கு...

THE EDITOR
'TAMIL MURASY'
EPIC
10 RUE DES MARTYRS
75009-PARIS.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திகள்

## ஈழத்தில் சிறீலங்கா கூலிப்படைகளின் கோர வெறியாட்டம்

ஈழத்தில் யாழ்ச் குடாநாட்டிற்குள் சிறீலங்கா அரசின் விமானக் கழுகுகள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை தொடர்ந்து நடத்திவருகின்றன. ஈழமக்கள் மீது 'செல்' தாக்குதல்கள் மற்றும் இடையிடையேயான சிறிய அளவு விமானத் தாக்குதல்களை நடத்தி வந்த சிறீலங்கா அரசபடைகள் கொழும்புக் குண்டு வெடிப்பை அடுத்து மூர்க்கத்தனமான ஆவேசத்துடன் ஈழமக்கள் மீது பாய்ந்துள்ளன. யாழ்ப்பாணம், நல்லூர், பலாலி, தெல்லிப்பளை, தொண்டமனாறு, வல்வெட்டித்துறை, ஆகிய பகுதிகளில் கூலிப்படைகள் மேற்கொண்ட விமானத் தாக்குதல்களில் 300க்கும் அதிகமான அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். ஆயிரக்கணக்கானோரதுவீடுகள் சேதமாக்கப்பட்டு அகதிகளாகியுள்ளனர். அதே சமயம் சிறீலங்கா இராணுவம் முகாம்களை விட்டு வெளியேறி மக்கள் மீதான தாக்குதல்களை ஆரம்பித்துள்ளது. தீவிரவாதிகள் சிங்கள மக்களுக்கெதிரான தாக்குதல்களை நிறுத்தும் வரை தாம் விமானத் த தாக்குதல்களை நிறுத்தப் போவதில்லை என்று இனவாத அரசு அறிவித்துள்ளதுடன் கொழும்புக் குண்டு வெடிப்பைக் காரணம்காட்டி தனது மிருகத்தனமானநடவடிக்கைகளுக்கெதிரான சர்வதேசக் கண்டனங்களையும் இனவாத அரசு திசை திருப்பிவருகிறது.

## திருக்கோணமலையில் ......... கொழும்பில் அப்பாவிச் சிங்கள மக்களுக்கெதிராக மனித நேயமற்ற சக்திகள் நடத்திய மிருகத்தனமான தாக்குதல்கள்

இனங்களைப் பிரித்து வைத்திருப்பதன் மூலம் தனது ஆட்சி அதிகாரங்களையும் அரசியல்சுக போகத்தையும் காப்பாற்றிவரும் சிறீலங்கா இனவாத அரசுக்கு தாம் எந்த வகையிலும் குறைந்தவர்கள் அல்ல என்பதைதமிழ் பிற்போக்குச் சக்திகள் காட்டியுள்ளன. திருக்கோணமலையில் அறு பஸ்களில் வந்த அப்பாவிச் சிங்கள மக்கள் மீது வெறிபிடித்த மனிதகுல விரோதிகள் நடத்திய கோரத்தாக்குதல்களில் பெண்கள், குழந்தைகள், முதியவர்கள்உட்பட 127 அப்பாவிகள் கோரத்தனமாகக் கொல்லப்பட்டுள்ளனர். இச் சம்பவத்தை வன்மையாகக் கண்டித்த ஈ.பி.ஆர்.எல்.எவ் இந்த மனித விரோதச் செயலுக்குக் காரணம்புலிகள் இயக்கத் தினரேயாகும் எனக் கூறியுள்ளது. இவர்கள் நடத்திய இந்தக் காட்டுமிராண்டித்தனத்தையடுத்து 50க்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்கள் திருமலையில், கூலிப்படையினரால் கொல்லப்பட்டதுடன் அரசு 5000 ஆயுதபாணிகளான சிங்கள மக்களை திருமலையில் குடியேற்றப்போவதாகவும் அறிவித்துள்ளது. இதன் பின்னர் திருமலையிலிருந்து 80 மைல் தொலைவிலுள்ள வான் எல எனும் சிங்களக் கிராமத்தினுள் புகுந்தஇரத்தவெறிபிடித்த இந்தக் கும்பல் 5ஆண்கள், 5பெண்கள், 4சிறுமிகள், 1இளைஞன் உட்பட 15 பேரை கோரமாகக் கொன்றுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச் சம்பவங்களின் பின்னர் 21/4/87 அன்று சந்தடி மிக்க கொழும்பு பஸ் நிலையத்தில் நிகழ்ந்த குண்டு வெடிப்பில் 150க்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் 150க்கும் மேற்பட்டோர் படுகாயத்துக்குமுள்ளாகியுள்ளனர். முழு உலகையும் அதிர்ச்சிக்குள்ளாக்கிய இச்சம்பவம் நடந்த உடன் காடையர் கும்பல் தமிழ் மக்களது கடைகளையும், வீடுகளையும் தாக்கத் தொடங்கியது. அரசாங்கம் ஊரடங்கு நிலையை பிரகடனப்படுத்தி நிலமையை கட்டுப்படுத்தியது. வெலிகடைச் சிறையில் மற்றுமொரு வெறியாட்டம் நடத்தும் முயற்சியும் இமறக்கொள்ளப்பட்டது. இந்தக் குண்டு வெடிப்புக்கு EROS இயக்கமும், புலிகளுமே காரணம் என அரசு குற்றச் சாட்டியுள்ளது. கொழும்புக் குண்டு வெடிப்பு ஒரு பயங்கரவாதமே என ஈ.பி.ஆர்.எல்.எவ் வன்மையாகக் கண்டித்துள்ளது.

## புலிகளின் இரத்த வெறியாட்டம்

தொடர்கிறது....

தமக்குள் ஏற்பட்டுள்ள பதவிப் போட்டிகளையும், அதிகாரப் போட்டிகளையும் மூடிமறைக்க பிரபாகரன், பாலசிங்கம் தலைமையிலான புலி இயக்கத்தினர் மீண்டுமொரு கொலை வெறியாட்டத்தை யாழ்ப்பாணத்தில் நடத்தியுள்ளனர். பிரபாகரனின் போட்டியாளராகப் பேசப்பட்ட கிட்டுவின் மீது குண்டு வீசப்பட்டதையடுத்து நூற்றுக்கும் மேற்பட்ட இதர இயக்கப் போராளிகளும், பொதுமக்களும் புலிகளால் கொல்லப்பட்டுள்ளனர். இதில் 21 பேர் ஈ.பி.ஆர்.எல்.எவ்.ஐச் சேர்ந்தவர்கள். மக்கள் விடுதலைப் படையின் முன்னணித் தோழர்களான கபூர், பெஞ்சமின் ஆகியோருடன் ஈழப் பெண்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த தோழர்கள் கார்த்திகா, ருபி உட்பட ஆறு பெண் தோழர்களும் புலிகளால், கொல்லப்பட்டனர். மனித விரோத சக்திகளான புலிகளின் வெறியாட்டங்கள் ஈழத்தில், தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

## சோவியத் யூனியன்



### புதிய பாதையில் சோவியத் யூனியன்

தோழர் கோர்பச்சேவின் புதிய அரசியல் பொருளாதாரக் கொள்கைகள் சோவியத் யூனியனைப் புதிய திசைவழியில் நகர்த்த ஆரம்பித்துள்ளது. சமீபத்திய பொருளாதார அறிக்கைகளின் படி கடந்த ஆண்டுக்கான சோவியத் யூனியன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4% அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. கடந்த காலங்களாக பெரும் பாதிப்புக்குள்ளாகிவந்த உணவு உற்பத்தியும் சென்ற ஆண்டில் கணிசமான அதிகரிப்புக்குள்ளாகியுள்ளது. இந்த அதிகரிப்புகளுக்கான காரணம் தோழர் கோர்பச்சேவ் அறிமுகப்படுத்தியுள்ள புதிய பொருளாதாரக் கொள்கைகளும், ஒழுங்கு விதிகளுமேனக் கருதப்படுகிறது. அதேபோல சோவியத் யூனியனின் புதிய அரசியல் கொள்கைகளுக்கும் மேற்கு, கிழக்கு ஆகிய இரு நாடுகளிலும் பெரும் வரவேற்புக் கிட்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேசமயம் சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்த அமெரிக்க இராஜாங்க அமைச்சர் திரு.ஜோர்ஜ் சுல்ட்ஸ் சோவியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திவிட்டுநாடுதிரும்பியுள்ளார். ஐரோப்பாவில் இருந்த மத்திய வீச்சு ஏவுகணைகளை ஆகியோருக்கிடையிலான அடுத்த உச்சி மாகாநாடொன்றை ஏற்பாடு செய்வது தொடர்பாகவும் அவர் நிகழ்த்திய பேச்சுவார்த்தைகள் வெற்றியளித்துள்ளதாக அமெரிக்கச் செய்திகள் தெரிவிக்கின்றன. அதே சமயம் ஏவுகணைகளை அகற்றுவது தொடர்பாக சோவியத் யூனியனுடன், ஒரு வரலாற்றுச் முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்கான காலம் நெருங்கியுள்ளது என அமெரிக்க ஜனாதிபதி றேகன் தெரிவித்துள்ளார். அதேசமயம், சோவியத் யூனியன் ஆசியாவில் நிலைகொண்டுள்ள குறைந்த வீச்சு ஏவுகணைகளை நீக்கும் புதிய யோசனையையும் சமர்ப்பித்துள்ளது.

பிரான்சு

ஜனாதிபதித் தேர்தல்களுக்கான பிரச்சாரங்கள் மறைமுகமாக பிரான்சில் ஆரம்பித்துள்ளன.

1988 ம் ஆண்டின் நடுப்பகுதியிலே நடைபெறவிருக்கும் பிரான்சின் ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரச்சாரங்கள் மறைமுகமாக ஆரம்பமாகியுள்ளன. மேற்படி தேர்தலுக்கானவேட்பாளர்கள் யார் என்பது அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படாதபோதும் சோசலிசக்கட்சியின் வேட்பாளர் பட்டியலில் ஜனாதிபதி மித்திறோன், மிசேல் றொக்கார்ட் ஆகியோரது பெயர்கள் முன்னணியிலுள்ளன. சோசலிசக் கட்சியின் வருடாந்தக் காங்கிரஸ் ஏப்ரல் மாதம் நடைபெற்று முடிவடைந்த போதிலும் ஜனாதிபதி மித்திறோன் தாம் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பான தீர்மானகரமான முடிவு எதையும் இதுவரை அறிவிக்கவில்லை எனினும் இரண்டாவது தடவையாக ஜனாதிபதி பதவிக்கு திரு.மித்திறோன் போட்டியிடவிரும்பாதவிடத்து சோசலிசக் கட்சியின் வேட்பாளராக திரு.மிசேல் றொக்கார்ட் நியமிக்கப்படுவார் என எதிர்பாக்கப்படுகிறது. பொதுமக்களின் அபிப்பிராய வாக்கெடுப்புக்களில் அதிக ஆதரவைப் பெற்றுவரும் இவர் தீவிர சோசலிசக் கொள்கைகளை விட மிதமான சமுக ஜனநாயகக் கொள்கைகளில் நாட்டம் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அதே

அதேசமயம் வலதுசாரிக் கட்சிகளின் வேட்பாளர் பட்டியலில் முன்னாள் பிரதமர் திரு.றேமண்ட் பார், தற்போதைய பிரதமர் ஜக் சிறாக் ஆகியோரது பெயர்கள் முன்னணியில் இருந்த போதிலும் சமீபத்திய அபிப்பிராய வாக்கெடுப்புகளின்படி தமது தவறான நிர்வாகக்கையாளுகைகளால் பிரதமர் சிறாக் பெருமளவு ஆதரவை இழந்துவிட்டதும் திரு.பார் தமது ஆதரவை அதிகரித்துக் கொண்டுள்ளதும் தெரியவந்துள்ளது. அதேசமயம் கடந்த 7 திகதி பிரெஞ்சுப் பாராளுமன்றத்தின் புதிய கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்த பிரதமர் சிறாக் திரு. பாரின் ஆதரவாளர்கள் மீது கடுமையான கண்டனத்தை தெரிவித்துள்ளார். கூடவே இருந்து முதுகில் குத்துபவர்களின் இத்தகைய செயல்களால் ஜனாதிபதித் , தேர்தலில் வலதுசாரிக் கட்சிகளின் வேட்பாளர் தோல்வியடைய வேண்டிய நிலை ஏற்படலாம் எனவும் பிரதமர் சிறாக் எச்சரித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலிகளின் கொலை வெறியாட்டம் தொடர்கிறது. மக்களே புதிய பாசிசவாதிகளை இனம் காணுங்கள்.

ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றுப் புத்தகத்தை இரத்தத்திலே தோய்த்தெடுக்கும் புதிய பாசிஸ்டுகளான புலிகளின் கோரத்தனங்கள் தொடர்கின்றன. தமக்குள் ஏற்பட்டிருக்கும் பதவி-அதிகாரப் போட்டிகளை மூடி மறைப்பதற்காக இந்த முறை இந்தக் கொலைகாரக் கும்பல் ஈழத்தில் பலிவாங்கிய போராளிகளினதும்-பொது மக்களினதும் உயிர்களது எண்ணிக்கை நூறைத் தாண்டியுள்ளன. தேசத்தின் விடியலுக்காக அனைத்தையும் துறந்து போராட்டத்தில் குதித்த நூறுக்கும் மேற்பட்ட இளம் குருத்துக்களை இந்தப் புலிகள் தங்கள் கோரப்பற்களாலும், கொலைகார நகங்களாலும் கீறிக் கிழித்து கொன்று குதறியுள்ளன. இதில் 24 போராளிகள் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைச் சேர்ந்தவர்கள், 80க்கு மேற்பட்டவர்கள் இதர விடுதலை அமைப்புகளைச் சேர்ந்த போராளிகளும், பொது மக்களும். மக்கள் விடுதலைப்படையின் முன்னணித் தோழர்களான கபூர், பெஞ்சமின் ஆகியோர் மாத்திரமல்ல ஈழப் பெண்கள் விடுதலை முன்னணியின் தோழர்கள் ரூபா, கார்த்திகா உட்பட ஆறு பெண் தோழர்களும் கூட புலிகளின் கொலை வெறிக்கு பலியாகியிருக்கிறார்கள். ஆம் மக்களே மீண்டும் மீண்டும் ஒரு முறை எங்கள் தேசம் உன்னதமான போராளிகளின் இரத்தத்தால் நனைந்திருக்கிறது. கொன்றவர்கள் கூலிப்படைகள் அல்ல, கொலை வெறி பிடித்த புலிகள். கொல்லப்பட்டவர்கள் ஆண்கள் மாத்திரமல்ல போராட்டத்துக்காக தம்மையே அர்ப்பணித்த பெண்களும் கூட.

வெறுமனே தமது தாகம் தமிழீழம் என்ற கோஷத்தை முன்னுக்கு வைத்துக்கொண்டு அதன் பின்னணியில் தொடர்ந்து இதர இயக்கங்களுக்கெதிராகவும், பொது மக்களுக்கெதிராகவும் புலிகள் கொலை வெறியாட்டம் நடாத்துவதன் உண்மையான நோக்கம் என்ன என்பதையும் இவர்களின் பின்னணி என்ன என்பதையும் நாம் இன்னும் ஆராயவோ அன்றி கண்டுகொள்ளாமலோ இருப்போமானால் ஈழப் போராட்டம் சீரழிந்து போவதைத் தடுக்க முடியாது.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 13ம் திகதி பிரபாகரன்-பாலசிங்கம் தலைமையிலான இந்தப் பாசிசக் கும்பல் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மீது நடத்திய தாக்குதல் நடவடிக்கைகளிலிருந்து இன்றுவரை நடந்துள்ள சம்பவங்களை நோக்கும் போது எமக்கு பல உண்மைகள் புரியும். இத்தாக்குதலின் பின்னர் அரச கூலிப்படைகள் பல முனைகளிலும் முன்னேறத் தொடங்கிவிட்டன. இதுவரை காலமும் ஈழப் போராளிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்த மன்னார், வவுனியா, முல்லைத்தீவு போன்ற பிரதேசங்களை சிறீ லங்கா கூலிப்படைகளிடம் கையளித்துவிட்டு புலிகள் யாழ்ப்பாணத்துக்குள் முடங்கிவிட்டன. இன்று பரந்தன் ஒமந்தைப் பகுதிகளில் இராணுவத்தினர் புதிய புதிய முகாம்களை திறந்துள்ளதுடன் ஓயாமல் இப்பகுதி வீதிகளில் சைக்கிளில் சுதந்திரமாக உலா வருகின்றனர். வவுனியாவிலோ இன்னொருபடி மேலே போய் அப்பகுதியிலுள்ள தமிழ்ப்பெண்களை அழைத்து அவர்களுக்கு வகுப்பு நடத்துகின்றனர். அவ்வகுப்புகளில் 'எங்களால் உங்களுக்கு எந்தப்பிரச்சனையும் வராது உங்களுடைய ஆட்கள்தான் உங்கள் பிள்ளைகளைக் கொலை செய்கிறார்கள்' என்று கூறி அவர்களின் மனங்களை மாற்றி வருகிறார்கள். யாழ்ப்பாணத்துக்குளாவது புலிகள் கூலிப்படைகளை முடக்கிவைத்திருக்கிறார்களா என்றால் அதுவும் இல்லை. இத்தனை காலமும் பல இயக்கப்போராளிகளும் சேர்ந்து கூலிப்படைகளை அசையவிடாது முடக்கி வைத்தனர். இப்போதோ புலிகள் இதர இயக்கங்கள் மீது அழித்தொழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு இராணுவத்தினர் முன்னேற வழி வகுத்துக்கொடுத்துள்ளனர். விளைவு இன்று இராணுவம் இன்று காங்கேசந்துறையிலிருந்து தெல்லிப்பளைக்கும், பலாலியிலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்த வசாவிளானுக்கும் முன்னேறிவிட்டன. மீண்டும் இராணுவ அடக்கு முறை எம்மக்கள் மீது பட ர புலிகள் வழிகோலி விட்டனர்.

இந்தக் காலகட்டத்தில் ஈழமக்களனைவரும் ஒரு விடயத்தைப் புரிந்து கொள்ளவேண்டும். ஈபிஆர்எல்எவ் க்கு எதிராக புலிகள் தாக்குதலை ஆரம்பித்தபோது என்ன காரணத்துக்காக யாழ்ப்பாணப்பகுதியில் ஈபிஆர்எல்எவ் போராளிகள் திட்டமிட்டபடி பின்வாங்கினர் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு காரணம் இன்னுமொரு இரத்தக்களரியை ஈழத்தில் ஏற்படுத்தக்கூடாது என்ற நோக்கம். அடுத்த காரணம் ஈபிஆர்எல்எவ் அன்றிலிருந்து இன்றுவரை எமது தேச விடுதலைப்போராட்டத்தை தனித்த எந்த சக்தியாலும் வெற்றிவிடமுடியாது, தேச விடுதலை சக்திகளிடையான ஒரு ஐக்கியப்பட்ட முன்னணியாலேயே வெல்லமுடியும் என்பதை வலியுறுத்தி வந்தது. ஆனால் புலிகளோ தனித்துத்தம்மால் போராட்டத்தை வெல்லமுடியும் என்று மார்தட்டி மற்ற இயக்கங்களை அழிக்கமுயன்று வந்தனர். இப்போது உண்மை நிலையை மக்களே புரிந்துகொள்ளுங்கள். தனித்து நின்று புலிகள் சாதித்தது என்ன? மன்னாரையும், வவுனியாவையும், முல்லைத்தீவையும், கிளிநொச்சியையும் கவிப்படைகளுக்குத் தாரைவார்த்துவிட்டு யாழ்ப்பாணத்தையும் அள்ளிக்கொடுத்துவிடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டதுதான் மிச்சம்.

உண்மையில் புலிகளின் உயிர் கொஞ்சமாவது எஞ்சியிருக்கிறது என்றால் அது இந்தியா போட்ட பிச்சைதான். நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு புலிகள் ஆயிரம் ஆயிரம் இந்திய விரோதப் பிரச்சாரத்தை யாழ்ப்பாணத்தில் அள்ளியிறைத்தாலும் இன்று அவர்களை இந்தியாதான் காப்பாற்றியிருக்கிறது. இந்திய அரசு தனது விசேட தூதுவராக தினேஸ்சிங்கை இலங்கைக்கு அனுப்பி சிறீலங்கா அரசு வடபகுதி மீதான பொருளாதாரத்தடையைக் கைவிடாவிட்டால் தாமே அந்தப்பொருளாதாரத்தடையை உடைப்போமென்று எச்சரிக்கை விட்டதால்தான் ஜெயவர்த்தனா அரசு ஓரளவு பொருளாதாரத்தடையை தளர்த்தியதே தவிர.... இந்திய அரசின் எச்சரிக்கைக்குப் பயந்துதான் ஆகாயத்தாக்குதல்களை நிறுத்தியதே ஒழிய புலிகள் இன்று புழுகுவதுபோல் அவர்களுக்குப் பயந்து அல்ல என்பதை மக்களே புரிந்து கொள்ளுங்கள்.

இப்படிப் பொய்களைக்கூறியே புலிகள் தம்மை நிலைநிறுத்திக் கொள்ள முயல்வது மாத்திரமல்ல மட்டக்களப்பிலும் யாழ்ப்பாணத்தை ஒத்த ஒரு சூழ்நிலையை உருவாக்க முயல்கின்றனர். யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட கொலைக்கும்பலை மட்டக்களப்புக்கு அனுப்பி அங்கே இதர இயக்கப்போராளிகளையும், பொது மக்களையும்கொலை செய்து அந்தப் பிரதேசத்தில் எண்ணற்ற இன்னல்களுக்கிடையே உருவாக்கப்பட்ட ஒரு போராட்ட சூழ்நிலையை சீர்குலைக்க முற்பட்டுள்ளனர்.

அதுமாத்திரமல்ல இன்னுமொரு பாதகமான சூழ்நிலையையும் புலிகள் ஈழப்போராட்டத்தில் தோற்றுவித்து வருகிறார்கள். வெறும் இராணுவக்கவர்ச்சி மூலமே மக்களைத்தம்வசம் வைத்திருக்கப் புலிகள் முயல்வது அனைவருக்கும் தெரிந்ததே. இன்று பொலிஸ் நிலையத்தாக்குதல்களோ அன்றி இராணுவ முகாம்களின் மீதானதாக்குதல்களோ ஏன் இராணுவத்தின் மீதான தாக்குதலையோ நடத்த வக்கற்ற புலிகள் மக்களின் கவனத்தை தம்வசம் வைத்திருக்கும் ஒரு நோக்கத்துடன் மாத்திரம் அப்பாவி சிங்கள மக்களுக்கெதிராக தமது கோரத்தனமான தாக்குதல்களை கட்டவிழ்த்துவிட்டிருப்பதன் சாட்சியங்களே திருமலையில் சிதறிய 150 ஐ அண்மித்த அப்பாவிச் சிங்கள மக்களதும் குழந்தைகளதும் இரத்தம்.

வெறுமனே தமது புகழையும், ஆயுதக்கவர்ச்சியையும் நிலைநாட்டுவதற்காக புலிகள் நடத்திய இந்தக் கோரச்செயல்களால் நாம் எவ்வளவு பெரிய இழப்பை உலக அரங்கில் சம்பாதிக்கிறோம். கடந்த காலங்களில் ஆயிரக்கணக்கான எம்மக்களின் இழப்புகளினாலும், ஈழத்தின்பால் விசுவாசம் கொண்ட பல வெளிநாடுகளில் வாழும் எண்ணற்ற மக்களது உழைப்பாலும் சர்வதேச அரங்கில் எமது போராட்டம் நீதியான.... நேர்மையான போராட்டம் என்ற நற்பெயரைப் பெற்றிருந்தது. ஆனால் புலிகளின் சிங்கள மக்கள் மீது நடத்தி வரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறியாட்டத்தினால் உலக அரங்கில் நாம் படிப்படியாக மனிதர்கள் என்ற பெயரை இழக்க ஆரம்பித்துவிட்டோம்.

தொடர்ந்தும் எம்மக்களை ஏமாற்றுவதற்காக தமிழ் தமிழ் என்று மொழி வெறியையும் கலைகலாச்சாரம் பண்பாடு என்று போலித்தனமாக கூப்பாடு போட்டுவரும் புலிகளின் உண்மைச் சொரூபம் என்ன? அப்பாவிச் சிங்கள மக்களைக் கொல்வதா? அல்லது போராட்டத்தில் குதித்த உன்னதமான எமது இளைஞர்களையும், யுவதிகளையும் கொல்வதா? அல்லது இதைத்தடுத்த பொதுமக்களைக் கொல்வதா? இந்தக்கட்டத்தில் திருநெல்வேலிச் சந்தியிலும் யாழ் நகரின் இதர இடங்களிலும் புலிகள் உயிரோடு அப்பாவிகளை எரித்த சம்பவங்களை நினைவு கூருகிறோம். இந்தப் பாசிசவாதிகள்தான் கலாச்சாரத்தைப்பற்றியும், பண்பாட்டைப் பற்றியும் வெட்டி முழங்குகிறார்கள்.

நேற்றுவரை இதர இயக்கங்கள் மீது கட்டவிழ்த்துவிட்ட கொலை வெறியையும், கோரத்தனத்தையும் நின்று தமக்குள் ஏற்பட்ட அதிகார, பதவிப்போட்டிகளைத் தீர்க்கவும் இந்தப் புலிகளின் தலைமை பயன்படுத்துகிறது. கைதடி சம்பவத்தில் ஏற்பட்ட சந்தேகம் மறைய முன்னர் கிட்டுவின் மீது குண்டு வீச்சு. இது குறித்து ஒரு பகிரங்க விசாரணை நடத்துமாறு புலிகளிடம் நாம் வேண்டினோம். ஆனால் புலிகளின் தலைமையோ மறுத்துவிட்டது. காரணம் என்ன? விசாரணை நடத்தினால் உண்மையான குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டுவிடுவார்கள் என்ற அச்சம்தான்.

இவை அனைத்திலிருந்தும் பாசமிக்க எமது மக்களே ஒரு விடயத்தைப் புரிந்து கொள்ளுங்கள், தனித்த எந்த சக்தியாலும் தனித்து நின்று எமது போராட்டத்தை வெல்லமுடியாது. போராட்டத்தை வெல்லவேண்டுமானால் ஐக்கியப்பட்ட முற்போக்குச் சக்திகளின் கரங்களை நீங்கள் பலப்படுத்த வேண்டும். போராட்டம் மழுங்கிவிட்டது இனிமேல் எமக்கு எந்த நம்பிக்கையும் இல்லை என்று நீங்கள் கலங்கிவிடத் தேவையில்லை. இப்போதுதான் அனுபவங்கள் எமக்குத் தெளிவான பாடங்களைக் கொடுத்திருக்கின்றன. எந்தசக்தியால் போராட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற உண்மை புரிந்திருக்கிறது. எனவே எமது அனுபவங்களைப் பாடமாகக் கொண்டு முற்போக்கு சக்திகளின் கரங்களைப் பலப்படுத்தி புதிய திசைவழியில் போராட்டத்தை முன்னெடுப்போம்.

"இறுதி வெற்றிவரை போராடுவோம்"

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி.

---

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியுடன் உங்கள் அனைத்துத் தொடர்புகளும்.

EPRLF (FRANCE)
10, RUE DES MARTYRS
75009- PARIS

தொலைபேசி: 48-74-98-30.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்திய அரசியலின் இன்றைய உருவம்

இந்தியா கடைப்பிடிக்கும் அதீத நெகிழ்வுத்தன்மை தனது எல்லைகளைக் கடந்து செல்லும்போது தமிழ்பேசும் மக்கள் ஒரு தீர்வினைச் சந்திக்குங்கால எல்லை நீட்டப்படுகின்றது. இதேவேளையில், பிரச்சனையின் வடிவமும் ஒரு மாற்றத்துக்குள்ளாக்கப்படுகின்றது.

கடந்தமாதம் சென்னையில் குண்டு வெடித்தது. இந்த விடயம் ஒரு சாதாரண விடயமாகிப் போயிருக்கலாம். ஆனால், அப்படி நடக்கவில்லை. காரணம், குண்டுவெடிப்பிற்கும் ஈழப் போராளிகளுக்குமிடையே முடிச்சினைப் போடும் விடயத்தில் இந்திய அரசு முந்தி விட்டது. சென்னையில் குண்டுவெடிப்பு என்பது மிகவும் அபூர்வமே. ஆனால், வெடிக்கும் குண்டுகள் பாரிய அதிர்ச்சிகளைக் கொண்டு வருவனவாகவே இருக்கின்றன. முன்பொருதடவை விமான நிலையத்தில் குண்டு வெடித்ததை இலகுவில் மறந்துபோக முடியாது. இந்தக் குண்டு வெடிப்புக்களின் பின்னணி மிகவும் மர்மமானதாகவே இருந்து வருகின்றது. இந்தப் பின்னணி- இலங்கைமீதான இந்தியச் செல்வாக்கை மதிப்பிட்டுக்கொள்ள உதவும்.

இந்தியாவின் மாற்றங்கள் ஆட்சிகளின் கைமாறல்களால் உருவாக்கப்பட்டிருக்கின்றன.இந்திரா காந்தியின் அரசியலுக்கும், ராஜீவ் காந்தியின் அரசியலுக்கும் இடையில் நீண்ட இடைவெளி ஏற்பட்டுக்கிடப்பதை அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டத் தவறவில்லை. ராஜீவ் ஆட்சிக்கு வந்த பின்னர் இந்திய அரசியல் சின்னப் பிள்ளை விளையாட்டாகமாறியது. இந்தச் சின்னப் பிள்ளைத் தனங்களை மறைக்க - "பேச்சுவார்த்தை" "விசேட தூதவர் சந்திப்புகள்" "சில எச்சரிக்கைகள்" போன்ற மாய்மாலங்கள் காட்டப்பட்டன. இந்திரா காந்தியின் மரணத்தின் பின் இந்தியா தனது தனித்துவத்தைத் தானாகவே கீழிறக்கிக்கொண்டது என்பதை ராஜீவின் கடந்த கால, அதாவது குறுகிய கால ஆட்சி தெட்டம் தெளிவாகக் காட்டுகின்றது.

ஆரம்பத்தில், இந்தியாவின் சமகால கொதிக்கும் உள்நாட்டுப் பிரச்சனைகளைத் தீர்த்துவிடுமாயும் என சில நடவடிக்கைகளை எடுத்த இந்திய அரசு, அவை வெறும் ஜாலங்கள்என்பதை நிரூபித்திருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயல் நாட்டுப் பிரச்சனையான இலங்கை நெருக்கடியிலும் கூட தன்னைப் பூச்சியம் என்று காட்டியிருக்கின்றது.

உலகவிவகாரங்களில் "டபிள்கேம்" போட்டுக்கொண்டிருக்கின்றது.

இவைகள் அனைத்தையும் விட இந்திய அரசியலுக்குள் குறிப்பாக ராஜீவ் காந்திக்கும் -ஜனாதிபதி செயில்சிங்கிற்கும் இடையில் வளர்ந்திருக்கும் கசப்பு- அனைத்துப்- பிரச்சனைகளுக்-கும் முத்தாய்ப்பு வைப்பதாக அமைந்துள்ளது.

நெருக்கடிகள் தாம் ராஜீவின் அரசியல் அறுவடைகள். இவ்வளவு பிரச்சனைகளுக்கும் மத்தியில் இந்திய அரசு இலங்கை நெருக்கடியைத் தீர்க்க ஆத்ம சுத்தியுடன் செயல்படுமா என்பது கேள்விக்குரிய விடயமே. தமிழ் பேசும் மக்கள் மீதான ஒடுக்குமுறைக்கெதிராக இன்னமும் இந்தியாவின் தார்மீகக்குரல் ஒலிக்கத் தொடங்கவில்லை. பிற்போக்குச் சிந்தனைகளைக் கட்டிக்காக்கும் ஏனைய நாடுகளைப் போன்று, அதற்கும் அதனது நலன்கள்தாம்முக்கியம். அந்த நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டுமாயின், அது எந்தப் பெரிய இன அழி-வையும் பார்த்து வாயை மூடிக்கொண்டு மௌனியாகி இருக்கும். இலங்கைக்கு அருகிலிருந்து கொண்டும், இலங்கை அரசின் நட்ப திட்டங்களை இந்திய அரசு தெரியாமல் இருக்கின்றது என்று ஒரு தப்புக்கணக்கைப் போடமுடியாது. இந்தியாவின் அதீதமான "நவீன நாகரிகத்தின்" பல வீனங்களை இலங்கையின் அடக்குமுறை அரசு தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறது.

இந்திய அரசு ஒரு விசேட தூதுவரைமட்டுமல்ல ஒன்பது விசேட தூதுவரை ஒரே நேரத்தில் அனுப்பினாலும் கூட இலங்கை அரசு கூலிப்படைகள் தமது மனித வேட்டைகளைத்தொடர்ந்து நடத்தும் என்பது நிச்சயமாகிவிட்டது. இந்தியாவில் ஒரு வட்ட மேசை கூடியபோதும் பல வட்ட மேசைகள் கூட்டப்பட்ட போதும், இலங்கையில் தமிழ் பேசும்மக்கள்சுதந்திரமாக கூலிப் படைகளினால் கொல்லப்பட்டிருக்கின்றார்கள் என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன. இந்திய அரசு இலங்கையை நோக்கிவிடும் அத்தனை எச்சரிக்கைகளும் ஜே.ஆர். ஜெயவர்தனவின் நிர்வாகத்தினால் எள்ளி நகையாடப்பட்டிருக்கின்றன.

ஈழப் போராட்டத்தில் ஜே.ஆர் இன் இராஜ தந்திரம் கணிசமான வெற்றியைப் பெற்றி-ருப்பதுடன், இந்தியாவின் இராஜ தந்திரம் தமிழ் பேசும் மக்களினதும், போராளிகளின-தும் பொறுமையை மிகவும் நன்றாகவே சோதிப்பதுடன், இந்தியா மீதான ஒரு வெறுப்புணர்வையும் மறைமுகமாக தமிழ் பேசும் மக்களிடையே வளர்ந்திருக்கின்றது. அரசியல்அடிப்படைகளில் வைத்துப் பார்க்கும்போது இந்தியாவினால் இலங்கை நெருக்கடிக்கு ஒரு தீர்வைக் காட்டக் கூடிய பலம் உண்டு என்பது புலனாகின்றது. ஆனால், இந்தியா கடைப்பிடிக்-கும் அதீத நெகிழ்வுத்தன்மை தனது எல்லைகளைக் கடந்து செல்லும் போது தமிழ் பேசும் மக்கள் ஒரு தீர்வினைச் சந்திக்கும் காலம் எல்லை நீட்டப்படுகின்றது. இதே வேளையில் பிரச்சனையின் வடிவமும் மாற்றத்துக்குள்ளாக்கப்படுகின்றது என்பது ஒரு சாதாரண உண்மையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சனையைத் தீர்கலாமா என்பதைச் சோதிக்கு முகமாக இந்திரா காந்தியின் பிரதான வெளிநாட்டு அலுவல்கள் ஆலோசகரும், உலகப் புகழ் பெற்ற இராஜ தந்திரியுமான பார்த்தசாரதி இலங்கைக்கு அனுப்பப்பட்டார். அவரது தொடக்க முயற்சிகள் தோல்வியளித்தன. ஆனால், அவரோ தொடர்ந்தும் முயற்சிகளை எடுத்தார். அந்த முயற்சிகளைப் பரிசோதனைப் பண்ணிப்பார்ப்பதற்கிடையில்- பார்த்தசாரதியின் பங்களிப்பிற்கு முற்றுப் புள்ளி வைத்தது ராஜீவ் நிர்வாகம். இது ஜே. ஆர் ஜெயவர்த்தனவின் அரசுக்குச் சாதகமான பல பாதைகளை உருவாக்கிக் கொடுத்தது. பார்த்தசாரதிக்குப்பின் பேச்சு வார்த்தைகளில் கலந்துகொண்ட இந்திய அரசின் தூதுவர்கள் மிகவும் பிற்போக்குத்தனமான ஒரு அணுகுமுறையையே கையாண்டிருக்கின்றார்கள். இந்த அணுகுமுறைகள் தமிழ் மக்களது மன எழுச்சிகளை எள்ளி நகையாடியிருக்கின்றன. அத்துடன் பேச்சுவார்த்தைகளைக் கொண்டு பிரச்சனைகளைத் தீர்க்கக் கூடிய கால எல்லைகடந்துவிட்டது என்பதை இந்திய அரசுக்கு வெளிப்படையாகவே உணர்த்தியிருக்கின்றன. ஆனால், இந்திய அரசோ இன்னமும் பேச்சுவார்த்தைகள் என்ற காய்களைவைத்து தனது அரசியல் சதுரங்கத்தை நடத்துவதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கின்றது.

இந்திய அரசுக்குள் நடந்து கொண்டிருக்கும் பூகம்பம் இன்னொரு வித்தியாசமான படத்தை எமக்குக்காட்டுகின்றது. எது அந்தப் பூகம்பம் என்பதை பிரெஞ்சுப் பத்திரிகையாளரான J-P-GENE தனது கட்டுரையொன்றில் குறிப்பிடுகின்றார்.

" இந்தியாவின் பிரதான ஆங்கிலப் பத்திரிகைகளில் ஒன்றான இந்தியன் எக்ஸ்பிரஸ்சின் உரிமையாளரான திரு ராம் நாத் கோயேன்காவின் வீட்டில் பொலீசார் ஒரு முற்றுகையை கடந்த வெள்ளிக்கிழமைசெய்ததிலிருந்து செய்தித் தொடர்புச் சாதனங்களிற்கும் பிரதம மந்திரிக்கும் இடையில் விழுந்த நிரந்தர பிரிவு உறுதிப்படுத்தப்பட்டது.

" எக்ஸ்பிரஸ் நிர்வாகத்தின் நிதி சம்பந்தப்பட்ட ரீதியிலேயே முற்றுகை மேற்கொள்ளப்பட்டது என உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது. ஆனால், அரசியல் திட்ட ஒழுங்குகள் மீதான குழறுபடிகளையொட்டி ஜனாதிபதி - ஸெயில் சிங்கினால் ராஜீவ் காந்திக்கு எழுதப்பட்ட ஒரு கடிதம் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட சில மணிநேரங்களின் பின்னர் தான் திட்டமிட்டமுறையில் முற்றுகை மேற்கொள்ளப்பட்டது என்ற விடயம் டெல்லியில் உள்ள அனைவருக்கும் தெரியும்.

" சீக்கிய மதத்தவரான ஜனாதிபதி ஸெயில் சிங் இந்திரா காந்தியின் குடும்பத்துக்குள் உள்ள ஒரு முக்கியமான புள்ளியாவார். ஐந்து வருடங்களுக்கென நாடாளு மன்றத்திற்கு 1982 ஆம் ஆண்டு இந்திரா காந்தியினால் தெரிவு செய்யப்பட்ட ஸெயில் சிங் தாய்க்கும் மகனுக்கும் ஒரு விசுவாசமான உழைப்பை உறுதிப்படுத்தியிருக்கிறார். உள்நாட்டு நடவடிக்கைகள் சம்பந்தமான தீர்மானங்கள், உள்நாட்டுஅரசியல் மீதான தீர்மானங்கள் இவைகள் திட்டமிடப்பட்ட முறையில்தெரி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விக்கப்படாமலும், உத்தியோகபூர்வமான அறிக்கைகள் எதவும் பாரப்படுத்தப்படாமலும், கடிதங்கள், விசேட அழைப்புகள் எதுவுமே அனுப்பப்படாமலும் ஜனாதிபதிக்கு துரோகமிழைக்கப்பட்டிருக்கின்றது.

" குறிப்பிட்ட மாதங்களின் பின்னர் ஜனாதிபதி பொறுமையை இழந்தார் விளைவு, , பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை மீதான தபால்தலைக் கைச் சட்டதிட்டத்திற்கு கையெழுத்து வைக்கமறுத்தார். ராஜீவின் வாசஸ்தலத்திற்கு அருகில் எதிர்க் கட்சித் தலைவர்களைச் சந்தித்து மறைமுகமான விதத்தில், நாடாளுமன்றத்தில் கேள்விகள்எழுப்பப்பட வேண்டிய ஒரு நிலையை உருவாக்கினர்.

" இந்தியன் எக்ஸ்பிரஸில் பிரசுரிக்கப்பட்ட கடிதத்தில் ஜனாதிபதி கிட்டத்தட்ட பத்துக் கேள்விகளை எழுப்பியுள்ளார். அதாவது முக்கியமான விடயங்களில் ஏன் அவரது ஆலோசனை கேட்கப்படாதுவிட்டது என்று. ஆனால், ராஜீவ் காந்தியோ தான் முக்கியமான விடயங்களில் ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டிருந்ததாகத் தெரிவித்திருக்கிறார்.

" இதேவேளையில் எதிர்க் கட்சியினரோ பிரதமர் பொய் சொல்லுகிறார் என்றும், அரசியல் திட்டத்தை மானபங்கப்படுத்தியிருக்கிறார், என்றும் குற்றம் சாட்டியுள்ளன. "

பிரெஞ்சுப் பத்திரிகையாளரால் சுட்டிக்காட்டப்பட்டிருக்கும் இந்த எரியும் பிரச்சனை விரைவில் தணிந்து விடும் என்று கருதமுடியாது. இந்திரா காந்தியின் நம்பிக்கைக்குப்பாத்திரமானவர்கள் ராஜீவின் ஆட்சியில் திட்டமிடப்பட்டவிதத்தில் தாழ்த்தப்பட்டு வந்திருக்கின்றார்கள் என்பது ஒரு பொதுவான உண்மை.

இவ்வளவு பிரச்சனைகளுக்கும் மத்தியில், இந்தியா, இலங்கை விடயத்தில் ஆத்ம சுத்தியுடன் தன்னை இணைத்துக்கொள்ளுமா? இந்தியாவின் பங்களிப்பினைக் கொண்டு இலங்கைப்பிரச்சனைக்கு ஒரு தீர்வைக் கொண்டுவருவது சாத்தியமானதே.

இந்தப் பங்களிப்பு எமக்குக் கிடைக்குமா? அல்லது இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கைகளில் மாற்றங்கள் கொண்டுவரப்படுமா? என்பதே இன்று வடிவெடுத்திருக்கும்பிரதான கேள்விகளாகும்.

- சௌந்தர்.

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்லாத சேதிகள்

" குருசேத்திரத்தில் கர்ணன் விழ
"ஐயோ மகனே " என்று குந்தி
ஓடிச் சென்று அணைத்தாளே
ஐயோ ராசா நான் பாவி
இப்போ நான் பிறந்துவிட்டேன்
என்பிள்ளை என்று சொல்ல
முடியாத பாவியானேன்
எனக்கு மட்டும் பலமிருந்தால்
இரவிரவாய் உன்னை எடுத்து சென்று
செம்மணியில் எரித்திருப்பேன்
முந்த நாள் சாமம் உனக்கு
பழச்சோறு போட்ட கை
இந்த கடனையும்
துணிவோடு செய்திருக்கும் "

பல்லாயிரம் மையில்களுக்கப்பால் இருந்துகொண்டும் இக் கவிதையைக் படித்தால் எம்தாயெ ருத்தியின் 'புத்திரசோகம் எம்மை எம் தேசத்திற்குள் நிறுத்துகின்றது. "சன்மார்க்கா " என்ற பெண் கவிஞர் எழுதிய இக்கவிதை யாழ்ப்பாணம் பெண்கள் ஆய்வு வட்டத்தினால் வெளியிடப்பட்ட "சொல்லாத சேதிகள் " என்ற கவிதை தொகுப்பில் வெளிவந்து இருக்கின்றது. ஈழத்தில் முதல் பெண் கவிஞர்களின் கவிதைத் தொகுப்பு இது. பத்து பெண் கவிஞர்களின் இரு பத்தி நான்கு கவிதைகள் சிறிய அளவில் இப் புத்தகம் அமைந்திருந்தாலும் கனத்த விடயங்களுடன் வெளியிடப்பட்டது பாராட்டுக்குரியது.

" நறிய பொன்மலர் மென் சிறுவாயினால்
நங்கை கூறும் நவினங்கள் கேட்டீரோ"

பாரதி இதைப் பார்த்து இருந்தால் இன்னெருக்கால் இப்படி பாடியிருப்பான். பெண் என்ற நிலையில் இருந்த அவர்களின் உணர்வுகளையும், எதிர்பார்ப்புக்களையும், சோகங்களையும், வர்க்கம் சார்ந்து, வரலாறு சார்ந்து எடுத்து சொல்லும் இத்தொகுப்பில் காலத்தால் நிலைத்து நிற்கக் கூடிய பல கவிதைகள் இருக்கின்றது.

" எனக்கு —
முகம் இல்லை
இதயம் இல்லை
ஆத்மாவும் இல்லை
அவர்களின் பார்வையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு மார்புகள்
நீண்ட கூந்தல்
சிறிய இடை
பருத்த தொடை
இவைகளே உள்ளன"

புத்தகத்தை திறந்தவுடன் கண் படும் முதல் கவிதையிலே சங்கரி என்ற கவிஞர் பெண்ணாக பிறந்த சோகத்தை இப்படி முறையிடுகின்றார். தந்தை வழி சமூக அமைப்பு பெண்ணைபாலியப் பொருளாகவே ஆக்கிவிட்ட கொடுமை கவிதைகளாக வெடிக்கின்றது.

"அசை" "சீர்" "தளை" என்கின்ற அளவுகள் மீறி சொல்லால் மொழியால், எலும்புக் குருத்துக்களை சில்லிட வைக்கின்றார். எங்களுக்கு ஏற்கனவே அறிமுகமான ஊர்வசி என்ற கவிஞர்.

"எப்பொழுதுதான் என்னால்
நீ வசிக்கின்ற அந்த
திறந்த வெளிக்கு வரமுடியும்
உன் இருப்பிடம்
இங்கிருந்து வெகு தொலைவிலோ
இரண்டு சிட்டுக்குருவிகளை
இங்கே அனுப்பேன்
அல்லது
இரண்டு வண்ணாத்திப் பூச்சிகளையாவது

கவிதை நெடுக மென்மையான சோகத்தை அள்ளித்தெளிக்க ஊர்வசியால் எப்படித்தான் முடிகின்றது. வாழ்ந்து பெற்றதினால் சத்தியம் தெரிகின்றது.

"வாடைக்காற்றின் சிலிர்ப்பும்
வரப் போரத்தில் நெடிதுயர்ந்த
கூலாமரத்தின் பசுமையும்
நிறைந்த குளத்தின் மதகினூடு
திமிறிப்பாயும் நீரிழைகுமாய்
ஒதுங்கிப்போன இனிய பொழுதுகள்
ஊமையாய் மனதுள் அழுத்தும் "

"செல்வி" என்ற கவிஞர் "கோடையை" நினைத்து இக்கவிதையை எழுதினாலும் ஏதோஒரு பிரிவும் பழைய நினைவும் துயரமாக எங்கள் நெஞ்சைசூழவில்லையா? புதுக்கவிதையின் - சிறப்பும் இதுதான் கவிஞனும் சொற்களும் தங்களை மறைத்துக்கொள்ள வாசகர்கள்சுதந்திரமாக சிந்தித்து உணர்ந்து முடிவுகளை எடுத்துக் கொள்ளுகின்றான்.

பண ஆசையினாலோ அல்லது வேறு எந்தக் காரணங்களினாலோ காதலித்தவளை ஒதுக்கியவனைப் பற்றி எழுதிய கவிதை மிகவும் அருமையாக இருக்கின்றது. "பிரேமி " என்ற கவிஞர் இக்கவிதையை ஆக்கியிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" அன்றைய எனது மௌனமும்
இன்றைய உனது மௌனமும்
உனக்கே சாதகமானதில்
என்றென்றைக்கும்
வசந்தங்கள் உனக்கும்
சோகங்கள் எனக்குமாய்
ஆகிற்று உலகம்
நானோ
கனல் வாய்பிளந்து
புழுதி பறக்கின்ற
மைதான வெளிமுழுவதும்
தீ மிதித்து நடக்கின்றேன்
மௌனமே
இடையே சுகமாய் துயலும் "

காதல் பிரிவு பற்றி எத்தனையோ சினிமாப் பாடல்கள் தமிழர்கள் எங்களுக்கு தெரியும் இந்தப் பெண் பாடும் சோகம் சிலது புரியாமல் இருக்கலாம் ஆனால் சினிமாத்தனமற்ற, யாதார்த்தம் தெரிகின்றது. இக் கவிதை முழுக்க தனிமனித அநுபவமாகவும்அதேவேளை சமூக அநுபவமாகவும் இருக்கின்றது.

அ. சங்கரி- சி. சிவரமணி- சன்மார்க்கா- ரங்கா - மசூறு-ஏ.மஜீட- ஔவை- மைத்ரேயி- பிரேமி- அரேனுகா நவரட்ணம் - ஊர்வசி என்ற பத்துக் கவிஞர்களில்

ஏற்கனவே ஊர்வசி ஔவை மைத்திரேயி தமிழ் முரசு வாசகர்களுக்கு அறிமுகமானவர்கள் மிகுதிப்பேர் எங்களுக்கு புதசாக இருந்தாலும் மிக நல்ல கவிதைகளைப் படைத்திருக்-கின்றார்கள். கன்னுக்குப்பட்ட கவிதைகளின் சில வரிகளை எழுதினேன் தொகுப்புமுழுக்க உண்மையில் சிறந்த கவிதைகள்.

தாலாட்டு பாட்டுத்தான் பெண்களுக்கு சொந்தமானதென்றல்ல இன்று போராட்டமே வாழ்வாகிப் போன எம் தேசத்தில் அப்பாக்களை தங்கள் தோளையுயர்த்தி சாக்தி சத்தியத்தை வெல்ல பெண்கள் அணிவகுத்து நிற்பது இத்தொகுப்பு வெளிவந்ததிற்குரிய காரணம் என நினைக்கின்றேன்.

தேவராணி

இக் கவிதைத் தொகுப்பை பிரான்சில்
வாங்கவிரும்புவோர் தொடர்பு கொள்ள
வேண்டிய முகவரி.... ASSEA.
3, ALLEÉ PAUL LEAUTAUD
95200- SARCELLS.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழம்

# இயக்க முரண்பாடுகள்

ஈழ புத்ரா.

இயக்க முரண்பாடுகள் இவ்வளவு வேகமாகவும், விரைவாகவும் முட்டிமோதும் என்று எவருமே எதிர்பார்த்திருக்கவில்லை. ஆனால், இன்றோ உலகநாடுகள் கைகொட்டிச் சிரிக்கின்றளவிற்கு முரண்பாடுகள் தமது விகாரமான உருவங்களைக் காட்டிக் கொண்டிருக்கின்றன. இந்த நிலைமைக்குரிய காரணங்களை மக்கள் கொஞ்சமாகப் புரிந்து வருகின்றார்கள். இன்றைய தரமான விமர்சனத்தின் பார்வையில் அனைத்து இயக்கங்களும் குற்றவாளிக் கூண்டிலேயே நிறுத்தப்படுகின்றன. போராட்டத்தின் உண்மையான இலக்கை மறக்க வேண்டிய அளவிற்கு ஒரு துரதிஷ்டமான நிலை உருவாகிவிட்டது. ஆனால், இந்த நிலை சரியானதா? இது போராட்டத்துக்கு உதவுமா? என்பதனைப்பற்றியபிரச்னை எங்களது இயக்கங்களுக்கிடையே வந்துவிட்டதா? கேள்விகள் பல பக்கங்களாலும் கேட்கப்படுகின்றன. சில கேள்விகளுக்கு மட்டுமே பதில்களும், பல கேள்விகளுக்கு நியாயங்களும் கிடைக்கின்றன.

இலங்கை இனவெறி அரசு பொருளாதாரத் தடையைக் கொண்டுவந்ததற்கு பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. இயக்கங்களையும், மக்களையும் நிலைகுலைய வைப்பது தான் அதனது அடிப்படைநோக்கம். பொருளாதாரத் தடை தான் நினைத்ததைச் சாதிக்கும் என்பது ஒரு சாதாரண உண்மை. ஆனால், இந்த உண்மையாவது இயக்கங்களிற்கு உறைக்காமல் போனது மிக, மிக வெட்கப்படக்கூடியதாகும். இயக்க முரண்பாடுகள் ஒரு முடிவிற்கு வந்திருக்குமாயின் பொருளாதாரத்தடையின் அடிப்படையில் மக்கள் கூலிப் படையினரால் எதிர்கொண்ட உயிரிழப்புகள் பலவற்றைத் தடுத்திருக்கலாம். ஆனால், பொருளாதாரத்தடையைப் பற்றிய பிரச்னை இல்லாமல் இயக்கங்கள் போட்டி போட்டுக்கொண்டு நானா, நீயா என்று முரண்பாடுகளை வளர்த்துக் கொண்டன. இன்றைய ஈழத்துஅரசியலை உற்று நோக்கும் போது, இயக்க முரண்பாடுகளிற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய அவசியத் தேவையை உணரமுடிகின்றது, எமது நிலத்தில் எமது மக்கள் தங்களது வாழும்உரிமையை நிலைநாட்டிக் கொள்ள வேண்டுமாயின் இயக்கங்களின் இன்றைய "கிட்டி" "றில்" விளையாட்டுகள் நிறுத்தப்பட வேண்டும்.

இயக்கங்களின் வளர்ச்சி கூர்மையடைந்து கொண்டு சென்றவேளையில் அதிகம் பாவிக்கப்பட்ட ஒரு சொல் "தந்திரம்" – ஆகும். அதாவது அரசியல்– இராணுவ தந்திரம். இந்தத் தந்திரம் பற்றிய அறிவில் இயக்கங்கள் எல்லாமே கணிசமான அறிவைக் கொண்டிருந்தன என்பதற்கு போராட்டத்தின் இரண்டாம் காலகட்டமும், அந்தக் காலகட்கட்டத்தில் நடத்தப்பட்ட தாக்குதலும் சான்றுகளாகும். இலங்கை இராணுவமே இந்தத் தந்திரங்களைக் கண்டு திணறிக் கொண்டிருந்தது. பல தந்திரங்களின் தாற்பரியங்களை மக்கள் புரிந்துகொள்ளாமல் இருந்தனர். இலங்கை அரசினை நோக்கியிருந்தவரையிலும் "தந்திரங்கள்" – அர்த்தம் பொதிந்தவையாக இருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், காலம் மிகவும் விரைவிலேயே மாறியது. இயக்கங்கள் தங்கள் பலத்தைக்காட்ட இயக்கங்களிடையே இந்தத் "தந்திராபாணங்களை" விடத்தொடங்கின. விளைவு, ஒருபக்கத்தில் இருந்த போராளிகளின் தலைகள் உருளத்தொடங்கின. இது இயக்கங்களின் அரசியல் முதிர்ச்சியின்மையையே காட்டுகின்றது. இயக்க முரண்பாடுகளுக்கு வெள்ளோட்டம் செய்து வைத்தமை இந்த "தந்திராபாணங்களே" என்பதை மறுத்துரைக்க முடியாது.

மக்களின் பார்வையில் இயக்கங்கள் எல்லாம் ஒரே தளத்தில் வைத்தே ஒரு கால கட்டத்தில் மதிக்கப்பட்டன. இந்தப் பார்வை முழுக்க முழுக்க சரியானது என்று சொல்லமுடியாது. ஆனால், இந்தப் பார்வையின் நிழலில் மக்கள் இயக்கங்களுக்கிடையிலான ஒரு ஐக்கியத்தையே விரும்புகிறார்கள் என்ற முடிவுக்கு வரலாம். இயக்கங்களோ, மக்களின் பார்வையின் அடிப்படையில் புதைந்துகிடந்த பொதுவான நோக்கிற்கு அருகில்வரத்தவறியமையால் இயக்க முரண்பாடுகள் வலுவடைவது மிகவும் இலகுவாயமைந்தது.

இயக்கங்கள் – மக்கள். இந்த இரண்டு சக்திகளிலும் பொறுமையைக் கூடுதலாகக் கட்டிக் காத்தவர்கள் மக்களே. அவர்கள், இந்தக் கணத்திலும் கூட, வேற்றுமைக்குள் ஐக்கியத்தைக் காணத் தயாராக இருக்கின்றார்கள். இயக்கங்களோ தங்களது முரண்பாடுகளுக்கு, முடிவுரை எழுதும் காரியத்தைத் தாழ்த்திக் கொண்டேயுள்ளன.

தங்கள் தங்கள் பலத்தைக் காட்டும் முயற்சியில் இயக்கங்கள் தங்களிடையே முரண்பாடுகளை வளர்த்துக் கொண்டதன் மூலம் எதிரியின் கரத்தை மட்டுமே பலப்படுத்திக் கொண்டன. இயக்கங்களுக்கிடையேயான பலப்பரீட்சையே ஈழப் போராட்டம் என்ற ஒருமுடிவிற்கு வந்துவிடமுடியாது. ஏனெனில், கூலிப்படைகளினால் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கும் மக்களின் பக்கம் திரும்ப வேண்டிய ஒரு கட்டாயக் கடமை இயக்கங்களிற்கு உண்டு.

இன்று கொழுந்துவிட்டெரியும் இயக்க முரண்பாடுகளினால் எந்தவொரு இயக்கமும் லாபமடையப் போகாது. இயக்கங்கள் இயக்கங்களை முழுமையாக அழித்தொழிக்க நினைக்கும் விகாரமான போக்கு எமது போராட்டத்தின் மீது கரியைப் பூசிவிடும்.

ஈழம் தான் எமக்கும் வேண்டும் என்ற தளத்தில் எல்லா இயக்கங்களும் நிற்கின்றன என்பது உண்மையே. ஆனால், தத்துவார்த்த ரீதியில் இயக்கங்கள் வேறுபட்டு நிற்கின்றன. இந்த வேறுபாடும் இயக்க முரண்பாடுகளைத் தோற்றுவிக்கின்றது.

ஈழமக்களின் உயிரிழப்பைத் தடுக்க வேண்டுமாயின் இயக்கங்கள் தமது முரண்பாடுகளை முடித்துத் கொள்ளவேண்டும். முரண்பாடுகளை முடிப்பதாயின், சத்திய சுத்தியின் அடிப்படையில் இயக்கங்களுக்கிடையே ஒரு கூட்டு உருவாக வேண்டும்.

இந்தக் கூட்டு உருவாகுமா? .......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதை

எழுதியவர்

தாஸன்



# அகதித் தவாரயணிலே

வேலை நிறுத்தம் என்கின்ற செய்தி நேற்றே தெரிந்தாகிவிட்டது இருப்பினும் இடையிடையே சேவைகள் நடைபெறுவதும் உண்டு. சித்திரா வழக்கத்தைவிட அரைமணிநேரம் முன்னதாகவே எழுந்து றெயிலுக்காக விரைந்தாள். காலை 8.30 மணிக்கெல்லாம், தையல் நிலையத்தை சென்றடைய வேண்டி இருப்பதால் கைக்கடிகாரத்தைப் பார்ப்பதும் றெயின் வரும் பாதையைப் பார்ப்பதுமாக இருந்தாள். வழக்கம் போல் சன நெருக்கடிகளுக்கு குறைவே இல்லை. உடலையே வாட்டியெடுக்கும் குளிர் எப்படித் - தான் இருந்தாலும் தங்கள், தங்கள் வேலைகளைக் கவனிக்க பிரெஞ்சு மக்கள் தவறுவதே இல்லைப் போலும். வருபவர் போவோர்களுக்கு இடைஞ்சல் இல்லாமல் ஓரமாக நின்று பிரெஞ்சுப் பெண்களின் அலங்காரங்களைப் பார்த்து ரசித்துக் கொண்டி- ருந்தாள் சித்திரா

"எப்படிக்கு றெயின் தப்பரவுக்கு வராதோ இவ்வளவு சனங்களும் நிக்கிறுகள் தானே கொஞ்ச நேரம் நின்று பார்ப்பம்" இவ்வாறு தன் மனதுக்குள் நினைத்துக் கொண்டு தன் தலையின் இரண்டு கரையிலும் குத்திய கிளிப்பின் நேராக இருக்கிறதா என சரி பார்த்துவிட்டு மீண்டும் வேடிக்கை பார்ப்பதில் தன் புலன்களை செலுத்துகின்றாள்! "என்ன மச்சான் தனிய நிக்கிற" ஒரு தமிழ் குரல் ஓங்கி ஒலித்தது. அந்த குரல் வந்ததிசையை நோக்கி தன் பார்வையை திருப்பினாள். மூன்று தமிழ் வாலிபர்கள் ஒருவருக்கொருவர் கைகுலுக்கிய வண்ணம் பேச்சைத் தொடர்ந்தார்கள். அதில் ஒருவன் உள்ளே - இழுத்த சிகரெட் புகையை [illegible] [illegible] வெளியே விட்டுக் கொண்டு கல் வெட்டா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல் அவளையே பார்த்துக் கொண்டு பேசத் தொடங்கினன். இவர்கள் நம் இளைஞர்கள் தான் என தெரிந்து கொண்ட சித்திரா சிறிது தூரம் ஒதுங்கிப் போய் நின்றாள். அவள் சிறிது தூரத்தில் நின்றாலும் அந்த இளைஞர்களின் பேச்சுக்கள் அவள் காதுகளில் விழத்தான் செய்தன. "நான் பாரிசுக்கு வந்து இன்டைக்குத்தான் மச்சான் உன்னைக் காணுறன் யாழ்ப்பாணத்தாலே யாழ்ப்பாணத்தில எவ்விடம்" என முடிப்பதற்குள் மற்றையவன் தொடர்ந்தான். "இன்டைக்கு றெயின் துப்பரவுக்கு ஓடாது போல இருக்கு வாவன் மச்சான் என்ர றூம் பக்கத்தில தான் கிடக்கு சமைச்சு சாப்பிட்டுப் போகலாம்" இப்படியே மூவரும் மாறிமாறி தங்களுக்குள்ளே பேசிக் கொண்டிருந்தனர்.

இவர்கள் ஆரம்பத்தில் பேசும்போது தங்களைப் பற்றித்தான் பேசினர்கள் என நினைத்தசித்திராவுக்கு இவர்களது பேச்சுத் தொடர்ச்சிகள் தன்னை குறிவைத்துத் தான்பேசப் படுகின்றன என்பதை ஓரளவு புரிந்து கொண்டாள். இவர்கள் கதைப்பது எதுவும்தனக்கு கேட்கவில்லை என்பது போல மீண்டும் றெயின் வரும் பாதையையும் கைக்கடிகாரத்தையும் மாறி மாறி பார்த்த வண்ணம் இருந்தாள். ஆனலும் அவர்களின் பேச்சுக்கள் அடங்கிய பாடில்லை முன்னையவிட இப்போது அருவருக்கத்தக்கதும், அசிங்கமானதுமானவார்த்தைகள் வெளிவரத் தொடங்கின. சகிக்க முடியாத அவர்களது பேச்சுகளுக்கு காது கொடுக்க முடியாத சித்திரா அவர்கள் கண்ணில் படாத தூரத்தில் சென்று இவர்களது கேவலமான நடத்தைகளை எண்ணி வேதனைப்பட்டாள்.

"ஈழத்தில் இருக்கிற பெடியள் எவ்வளவு கஸ்டப்பட்டுப் போராடுதுகள் இஞ்ச என்னென்டால் இதுகள் குடிச்சுப் போட்டு கேவலமான முறையில் நடக்குதுகள்" தங்கட சகோதரிகளாக நினைச்சு துணைபுரிய வேண்டியவர்கள் இப்படி அசிங்கமாக நடந்து கொள்கிறார்களே என நினைத்துக் கொண்டு யாருக்கும் கேட்காதபடி தனக்குள்ளேயே இவர்களைத் திட்டித் தீர்த்துக் கொண்டாள். ஈழத்தில் எவ்வளவு கஸ்டப்படுகிறார்கள் என்பதை நினைத்த போது தான் அவள் இதயத்தைக் கவர்ந்த றேகனைப் பற்றிய சிந்தனைகள் மீண்டும் அவளுக்கு உள்ளூர எழத் தொடங்கின.

தன்னோடு பாடசாலையில் படித்த றேகன் தன் காதலை துறந்தது மட்டுமல்லாமல், சகல ஆசாபாசங்களையும் துறந்து ஈழப் போராட்டத்தில், புரட்சிகர கட்சியில் தன்னை முழு நேரத் தொண்டனுக மாற்றி வெளிநாட்டில் பயிற்சி பெற சென்றதையும், போராடக்களத்தில் குதிக்க முன்னர் அவனது சிந்தனைகளையும் செயல்களையும் இறுதியாக தன்னிடம் விடைபெற்றுச் சென்றதையும் இப்போது நினைத்துக் கொள்கிறாள். ஓ அவைகள் தான் எவ்வளவு வேதனையான ஆனலும், மறக்க முடியாத நினைவுகள்.

உயர்தரக் கல்வி படித்த ஆரம்ப காலங்களில் தானும் தன் படிப்புமாக இருந்த றேகன் புரட்சிகர இயக்கமொன்றில் ஏற்பட்ட உறவின் பின் அவனது சிந்தனைகளும், செயல்களும் மாற்றமடைந்து கொண்டே இருந்தன. பாடப் புத்தகங்களை சுமந்த அவனது சயிக்கிள் பின் கூடை இப்போதெல்லாம் இயக்கப் பிரசுரங்களையும், இயக்கப் பத்திரிகைகளையும் சுமக்கத் தொடங்கின. அவன் அடிக்கடி சொல்வான் "சித்திரா" நான் வெறும் மொழி வெறியில் இந்தப் போராட்டத்தில இணைய இல்லை. எங்களின்ர நாட்டில மொழிஉரிமை மட்டும் பறிக்கப்படஇல்லை , தொழில் ரீதியாகவும், சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் கூட பறிக்கப்பட்டிருக்கிறம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது மட்டுமில்லை இவ்வர்க்கத்தால் பெண்கள் மிகவும் மோசமாக அடக்கப்படுகினம். இதுகளையெல்லாம் மாற்றியமைக்கிற போராட்டத்திலை நான் பங்காளராகப் போறன்" இவ்வாறு பல கருத்துக்கள் அவரால் எனக்கு பலதடவைகள் போதிக்கப்பட்டன. ஆரம்பத்தில் அக்கருத்துக்கள் எனக்கு புரியாது விட்டாலும் கூட படிப்படியாக அக்கருத்துக்கள் சரியானவை என ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது. தமது கட்சியினது கொள்கைகளைப்பற்றி எத்தனையோ தடவைகள் கூறிய விளக்கங்கள் இப்போது உண்மையிலேயே நடக்கின்றது. அவள் உள்ளம் கனத்தது றேகாவின் வார்த்தைகள் எவ்வளவு தீர்க்கதரிசனமானவை!

"சித்திரா! இன்றைக்கு தமிழீழம் என்று சொல்லிப் போராடுற சிலர் நாளைக்கு தமிழ் மக்களின்ர விடுதலைக்கு எதிரானவர்களாகக்கூட மாறலாம் இதில் சிலர் பதவிகளுக்காகவே இயக்கம் நடத்தினம். இதுகளையெல்லாம் கடந்துதான் போராட்டம் நடக்கும். சிலவேளைகளில் தமிழீழத்துக்காகப் போராடுறம் என்று சொல்லிக் கொள்ளுற எங்களில் சிலராலும் நான் கொல்லப்படலாம், அதற்குப் பொய்யான காரணங்களும் சோடிக்கப்படலாம். ஈழப் புரட்சிகரப் போராட்டம் என்னைப் போன்ற பல இளைஞர்களால் முன்னெடுக்கப்படும்" என்கின்ற றேகாவின் கருத்துக்கள் இன்று ஈழ மண்ணில் நிகழ்ந்து கொண்டிருப்பதை கண்முன்னே காண்பது போன்று தினசரி செய்திகளினூடாக இன்று கேட்கிறேன்.

இந்த அகதித் தரையின் அவல வாழ்க்கையை அனுபவிக்கும் போதுதான் தானும் றேகாவோடு இணைந்து ஈழப்போரில் தோள் கொடுத்திருக்கலாம், கண்டிப்பான குடும்பத்தின் கட்டுப்பாடான வாழ்க்கை தன்னை ஒரு கையாலாகாதவளாக ஆக்கிவிட்டதெண்ணி கலங்கிறாள்.

றேகா சித்திராவுக்கு இறுதியாக விடைகூறிக் கொண்டு இராணுவப் பயிற்சிக்காக ஈழ மண்ணை விட்டு வெளியேறிய பின்னரும் அவளைப் பற்றியதும், போராட்டம் பற்றியதுமான தகவல்கள் சித்திராவுக்கு வந்து கொண்டே இருந்தன. எப்படியோ இத் தொடர்புகளை அறிந்து கொண்ட அவளது பெற்றோர்கள் இவளும் இயக்கத்துக்குப் போய்விடுவாளோ என்னும் பயம் எழ மூன்று ஆண்டுகளுக்கு முன்னரே பிரான்சுக்கு வந்துவிட்ட இரண்டு அண்ணன்மாரிடமும் இவளை அனுப்பிவைப்பதென தீர்மானித்தனர். (யாழ்ப்பாணத்து மக்களில் பலருக்கு இருக்கும் பூர்சுவா சிந்தனைக்கு இவள் குடும்பத்தினர் என்ன விதிவிலக்கா) கடுகதி வேகத்தில் பாஸ்போட், விசா என்பன எடுக்கப்பட்டது. பெற்றோரை எதிர்த்து ஈழப் போராட்டத்திலை பங்காளியாக தைரியமில்லாத சித்திரா, வீட்டாரின் வலுக்கட்டாயத்தின் பேரில் அகதி என்ற முத்திரையோடு இன்று மூன்று மாத விசாவுக்கு உரிமையாளியானாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச் சம்பவங்களையெல்லாம் நினைவு கூர்ந்து கொண்டிருந்த சித்திராசின் சிந்தனையை கலைப்பது போல றெயில் நிலையத்தில் பூட்டப்பட்டிருந்த ஒலிபெருக்கிகள் பிரஞ்சில் ஏதோ அலறியது. அங்கு நின்ற அனைவரும் ஏதோ கதைத்தபடி நிலையத்தை விட்டு வெளியேறினர். " இன்டைக்கு றெயின் ஓடாது என்று அறிவிச்சிருக்கினார்கள் போல " என ஊகித்துக் கொண்டு சித்திராவும் நிலையத்தை விட்டு வெளியேறி வீடு நோக்கி நடந்தாள்.

றேகன் கூறிச் சென்ற புரட்சிக் கருத்துக்கள் அவள் நெஞ்சில் விதைகளாக தூவிக் - கொண்டிருந்தன. இந்த அந்நிய நாட்டிலே அகதியென்ற பெயரில் அமையப்போகும் புதிய அடிமைச் சமூகத்தில் நானும் ஒரு பிரஜையாக இருப்பதா, அல்லது என் மண்ணி லே சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க மரணத்தை எதிர் நோக்கி வாழுகின்ற மக்க- ளோடு வாழ்வதா...? இந்தக் கேள்விகள் அவள் இதயத்தில் எதிரொலிக்கத் தொடங்கின. இதற்கு விடைகாண தன்னுக்குள்ளேயே ஒரு கட்சியமைத்து அதற்குள் ஒரு உட்கட்சிப் போராட்டத்தை நடத்திக் கொண்டே சென்றாள்.

தாஸன்.

**************************************************



# இலக்கியக் கடிதங்கள்......

-அருந்ததி.

ஈழம் இன்று பௌதீக ரீதியான, உளரீதியான மாற்றங்களுக்குள்ளாகிக் கொண்டிருக்கும் எங்கள் தேசம் எவ்வாறு மனிதத்துவத்துக்குப் புறம்பான சகிக்கவொண்ணு அழிவுகளை பௌதீக ரீதியாக ஈழம் இன்று சந்தித்துக் கொண்டிருக்கின்றதோ, அவ்வாறே ஈழமக்களின் மனங்களிலும் உளரீதியான எதிர் நிலை மாற்றங்களையும் பாதிப்புக்களையும் கூட அது உள்வாங்கிக்-கொண்டு உலகின் கண்களை உறுத்திக் கொண்டிருக்கிறது. ஆனலும் அதற்குப் புறம்பானதும், அதாவது போர்க் கால எதார்த்தங்களுக்கு முகங்கொடுக்கும் மக்களின் சம கால பிரச்சனைகளின் அழுத்தம், அவைபற்றிய மனப்பதிவுகள், இயல்பாகவே இச்சூழலில் வெளித்தோன்றும் உணர்வுகள் என்பவையும்கூட, இச்சூழலிலிருந்து ஏதோ ஒரு வகையில் அப்புறப்ப-டுத்தப்பட்டுவிட்ட எம் மனங்களில் ஆர்ச்சரியக் குறியீடுகளை-விதைத்துக் கொண்டு வெளிக்கிளம்புவதினை இன்று அவதானிக்-கக் கூடியதாகவுள்ளது.

இவ்வகை வெளிப்பாடுகள் போர்க்கால இலக்கியம் என்னும், பெறுமானத்துக்குள் நிரந்தரவாசம் செய்யும் என்பது, வரலாற்று அடிப்படையிலான ஓரளவு இலக்கியப் பரிச்சயம்உள்ள எவருக்கும் புலப்படும் எளிதான உண்மை. இந்த வகையில்ஈழ மக்களின் இன்றைய முகங்கொடுப்புக்கள் அழிந்துபோன முகங்களுக்குள் நின்று அல்லற்படும் எம்மை ஓரளவுக்கு எம் மண்ணின் சூழலின் எதார்த்தத்தினை முகர்வதற்கும், எமது அன்னியப்பட்டநிலையினை, அதன் இடைவெளியினை குறுக்கி, ஓர் அன்னியோன்னியமான மன உறவுக்கு வழி அமைப்பதற்கும் வழி சமைக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது வெளிப்படை. இன்று ஈழத்தில் இருந்துவரும்கடிதங்கள் கூட பெரும்பாலும் நலம் விசாரிக்கும் சாதாரண மரபுநிலை யிலிருந்து விலகி அவலங்களின் அழுகுரல்களுக்கூடே அன்னியமா-கிப் போன எம் இனிய நினைவுகளை அசைபோடுவனவாகவும் அவைகளை மறுபடியும் எம் மண்ணில் தோற்றுவிக்க மனங்களில் பெற்றுவிட்ட உறுதியினை வெளிப்படுத்துவனவாகவும்அமைகின்றன.

அண்மையில் ஈழத்திலிருந்து "கேசா அண்ணைக்கு தங்கை சாந்திமதி எழுதிக்கொள்வது" எனத் தொடங்கும் ஓர் கடிதம், அது கடிதமா, இல்லை கவிதையா..... தெரியவில்லை. காலம் அதனைத் தீர்மானிக்கட்டும்.

அன்புச் சகோதரனே
உங்கள் மடல் கிடைத்தது
மகிழ்ச்சி.
அந்நிய மண்ணில் உங்கள்
உயிரைப் பாதுகாத்தாலும்
உங்கள் இதயம்
இங்குதான்
சுழன்று கொண்டிருக்கிறது.

அன்று
அன்றொரு நாள்
நீங்களும் நானும்
சேர்ந்து விளையாடிய
இடங்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ந்திருந்த
மலர்வனங்கள் ,
கை கோர்த்துத் திரிந்த
வீதிகள் , பள்ளிக் கூடம் ,
நூலகம் ,
சந்தித்த மனிதர்கள் ,
இவை பற்றிய
மனப்பதிவுகளை
மீண்டும் ஒருமுறை
மீட்டுப் பாருங்கள் , எவ்வளவு
இனிய நாட்கள் அவை ,
எவ்வளவு இனிய இடங்கள்
அவை ,
எவ்வளவு இனிய மனிதர்கள்
அவர்கள்
இப்போது இங்கு ஒன்றுமேயில்லை ,
கால்பந்து விளையாடிய மைதானம்
இன்று —
காக்கியுடை அரக்கனின் கூடாரம் ,
சோலைகள் தீய்ந்து
பாலைகளாயின ,
வீதிகளெல்லாம் ஒரே வெறுமை
அதுமட்டுமா ? . . . .
எங்கள் மனங்களிலும்
இன்று மாற்றங்கள் தான் ,
மனதில்
அன்றிருந்த மெல்லிய சலனங்கள்
எல்லாம் இப்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லவே இல்லை

உறுதியான

உணர்வலைகளில்

அவை —

அடித்துச் செல்லப்பட்டு விட்டன.

என்னை உங்கு வரச்சொல்லி எழுதியிருந்தீர்கள்,

அண்ணா. என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்

நான் உங்கு வரவிரும்பவில்லை. உங்களுக்கு குத்தவேண்டு

மென்று நான் இதை எழுதவில்லை

என் மன நிலையை தெரியப்படுத்துகின்றேன். எங்கள்

சொந்த மண் பறிபோகும்போது, வேற்று நாட்டில்

அடிமைகளாக இருந்து,

சுகபோகத்தை அனுபவித்து என்னால் பார்த்துக் கொண்

டிருக்கமுடியாது.

இங்கு தான் நான் இருக்கப் போகிறேன்.

சந்தர்ப்பம் வரும்போது நாட்டுக்காய் உழைக்கப்

போகிறேன்.

பதில் போடுங்கள்.

இப்படிக்கு,

உங்கள் அன்புத்,

தங்கை,

சாந்திமதி.

---

EPIC தரும் ஈ.பூச் செய்திகளை தொலைபேசி

மூலம் அறிந்து கொள்ள நீங்கள்

தொடர்பு கொள்ள வேண்டிய

தொலைபேசி எண்... 48-74-60-45.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நந்தவனத்திலோர் ஆண்டி

மூன்று தமிழ் தோன்றியதும்
எம்மிடமோ – நாங்கள்
மூத்த குடிப்பரம்பரையின்
புத்திரரோ?

இராமனும் பரதனும் அடிபடும்
இந்த இராமாயணம்
உலகம் நம்மாலே கற்கும்

இரும்பாலே செய்தாரோ மனதை
இப்படி கொடுமைகள் ஆக
நான் பெரிது நீ பெரிது
என் சாதி உன் சாதி
என் இயக்கம் உன் இயக்கம்
"நாங்கள்"
நந்தாவனத்திலோர் ஆண்டி
கூத்தாடிக் கூத்தாடிக்,
போட்டுடைத்தோமம

குந்தியிருக்கவோர் நிலம்
குறித்துக் காட்டவோர் பூமி
அன்னிய மொக்கும் உறவு
இழந்தவர் இங்கே
காற்சட்டை மேற்சட்டை போட்டு
நிர்வாணமாகத் திரிகின்றோம்
அந்நியரின் பூமியிலே

– செல்வம்.

* * * * * * * * * * * * * * *   * * * * * * * * * * * * * * * * * * * * * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வெளியீடு: ஈழமக்கள் செய்தித் தொடர்பு நிலையம்
பிரிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org